இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 177 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – தை 24 – வியாழக்கிழமை 06 பிப்ரவரி 2025 – மதுரை 16+8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 177 : Thiruvalluvar Year - 2056 - Thai 24 - Thursday 06 February 2025 - Madurai 16+8 Pages ₹ 5.00




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (5.2.2025) வன்னியர் கூட்டமைப்பின் தலைவர் சி.என்.ராமமூர்த்தி சந்தித்து, தங்களது நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று விழுப்புரம் மாவட்டம், வழுதரெட்டி கிராமத்தில் 21 சமூக நீதி போராளிகளுக்கு மணி மண்டபம் அமைத்து கொடுத்தமைக்காக தனது நன்றியினை தெரிவித்துக்கொண்டார். இச்சந்திப்பின்போது, நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள் ஆர்.எஸ். பாரதி, டி.கே.எஸ். இளங்கோவன், வன்னியர் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் வெங்கடேசன் மற்றும் நிருவாகிகள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (5.2.2025) பாட்டாளி மக்கள் கட்சியின் முன்னணி தலைவர் மறைந்த காடுவெட்டி குருவின் மகள் திருமதி. குரு. விருதாம்பிகை மற்றும் மருமகன் காடுவெட்டி மனோஜ் ஆகியோர் சந்தித்து, விழுப்புரம் மாவட்டம், வழுதரெட்டி கிராமத்தில் 21 சமூக நீதி போராளிகளுக்கு மணி மண்டபம் அமைத்து கொடுத்தமைக்காக, தங்களது நன்றியினை தெரிவித்துக் கொண்டனர். இச்சந்திப்பின்போது, நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள் ஆர்.எஸ்.பாரதி, டி.கே.எஸ்.இளங்கோவன் ஆகியோர் உடனிருந்தனர்.

## இன்றும், நாளையும் – இரண்டு நாட்கள்

# நெல்லை மாவட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கள ஆய்வு!

## பல நலத்திட்ட உதவிகளை வழங்கி – புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டுகிறார்!

**திருநெல்வேலி, பிப். 6 -**

**திருநெல்வேலி மாவட்டத்தில் இன்றும், நாளையும் (பிப்ரவரி 6 மற்றும் 7ம் தேதி களில்) முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கள ஆய்வு மேற்கொள்கிறார். அப்போது ரூ.6.18 ஆயிரம் கோடி மதிப்பிலான திட்டங் களை தொடங்கி வைக்கவுள்ளார்.**



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாவட்டந்தோறும் கள ஆய்வு மேற் கொண்டு வருகிறார். இந்த ஆய்வு பய ணத்தின்போது முடிவுற்ற திட்டப் பணிகளை தொடங்கி வைத்து, புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.

அந்த வகையில் 6 மற்றும் 7ம் தேதி களில் திருநெல்வேலி மாவட்டத்தில் கள ஆய்வு பயணத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மேற்கொள்ளப் போவதாக உங்களில் ஒருவன் கடிதத்தில் அறிவித்திருந்தார்.

இதையொட்டி திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை அருகேயுள்ள மைதானத்தில் நடைபெறும் அரசு விழாவில், சிறப்பு மருத்துவமனை வளாகத்தில் ரூ.78 கோடி மதிப்பில் கட்டி முடிக்கப்பட்டுள்ள சிறப்பு மருத்துவ வளாகத்தை முதல்வர் அவர்கள் திறந்து வைக்கவுள்ளார்.

தொடர்ந்து கங்கைகொண்டான் சிப்காட்டில் சோலார் தொழிற்சாலையை திறந்து வைக்கிறார். பாளையங்கோட்டை யில் மார்க்கெட் உள்ளிட்ட முடிவுற்ற திட்டப் பணிகளையும் தொடங்கி வைக்கிறார். மேலும் விழாவில் அரசு நலத்திட்ட உதவி களையும் வழங்குகிறார்.

முதல்வரின் வருகையை முன்னிட்டு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை அருகே மைதானத்தை சீரமைக்கும் பணி கள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு விழா விற்காக தயார் நிலையில் உள்ளது.

முதல்வர் அவர்கள் இன்று (6ம் தேதி) திருநெல்வேலி மாவட்டத்துக்கு வருகை தருகிறார். இன்று காலை 11.20 மணிக்கு தூத்துக்குடிக்கு விமானத்தில் வரும் முதல்வர் அவர்கள், அங்கிருந்து திருநெல் வேலிக்கு வருகை தருகிறார்.

இன்று திருநெல்வேலியில் கங்கை கொண்டான் சிப்காட்டில் சோலார் பவர் நிறுவனத்தை தொடங்கி வைத்துவிட்டு, உணவு பதப்படுத்தும் கூடத்தை திறந்து வைக்கிறார். இன்று மாலையில் கழக நிர்வாகிகளைச் சந்தித்து கள ஆய்வு மேற்கொள்கிறார்.

அத்துடன் பாளையங்கோட்டையில் கட்டப்பட்டுள்ள மார்க்கெட்டை திறந்து வைக்கிறார்.

நாளை (7ம் தேதி) காலையில் வெள் ளாங்குழியில் வெள்ளநீர் கால்வாய் திட் டத்தை தொடங்கி வைக்கிறார். அங்கு விவசாயிகளை சந்தித்து பேசிவிட்டு, பாளையங்கோட்டையில் விழா நடை பெறும் மைதானத்தில் 30 ஆயிரம் பேருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார். மொத்தமாக 2 நாட்களிலும் மாவட்டத்தில் ரூ.6.18 ஆயிரம் கோடி மதிப்பில் திட்டங் களை முதல்வர் தொடங்கி வைக்கிறார்.

**முதல்வருக்கு சிறப்பான வரவேற்பு!**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர் கள் பிப்ரவரி 6, 7 ஆகிய இரண்டு நாட்கள் நெல்லையில் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக வருகை தருகிறார். முதல்வர் அவர்கள் வருகையை முன்னிட்டு இன்று (6ம் தேதி) பாளை கே.டி.சி.நகர் ரவுண்டானா வில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேரு தலைமையில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட உள்ளது.

முதலமைச்சர் அவர்கள் வருகை தொடர்பாக அமைச்சர் கே.என்.நேரு, மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன், நெல்லை மாநகர காவல்துறை ஆணையர் சந்தோஷ் ஹாதிமணி, நெல்லை சரக காவல்துறை துணைத் தலைவர் முனைவர் பா.மூர்த்தி, மாநகராட்சி ஆணையாளர் சுகபுத்ரா, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் சரவணன் மற்றும் அரசு அலுவலர்களுடன் ஆலோசனை நடத்தினார்.

நிகழ்வில் மாவட்டச் செயலாளர் இரா. ஆவுடையப்பன், மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான், மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ., மாநகரச் செயலாளர் சு.சுப்ர மணியன் மற்றும் மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன், துணை மேயர் ராஜ், முன்னாள் எம்.பி. ஞானதிரவியம், முன்னாள் மேயர் சரவணன், மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் மாலை ராஜா, மாநில தொண்டரணி துணைச் செயலாளர் ஆவின் ஆறுமு கம்,மாநில விவசாயத் தொழிலாளரணி துணை செயலாளர் கணேஷ் குமார் ஆதித்தன், தலைமைச் செயற்குழு உறுப் பினர் பேச்சி பாண்டியன்,பொதுக்குழு உறுப்பினர் பரமசிவ ஐயப்பன், மாவட்ட துணைச் செயலாளர்கள் தர்மன், சுரேஷ், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பா ளர் செல்வ சூடாமணி, மாவட்ட இளைஞ ரணி துணை அமைப்பாளர் மீரான்மைதீன், பகுதிச் செயலாளர் அண்டன் செல்லதுரை மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

---

# டெல்லியில் யு.ஜி.சி. திருத்த விதிகளைக் கண்டித்து தி.மு.க. மாணவரணி ஆர்ப்பாட்டம்!

## ராகுல்காந்தி உள்பட இந்தியா கூட்டணிக் கட்சியினர் இன்று பங்கேற்கின்றனர்!

புதுடெல்லி, பிப். 6 -

யு.ஜி.சி., திருத்த விதிகளைக் கண்டித்து தி.மு.க. மாணவரணி சார்பில் டெல்லியில் இன்று நடைபெறவுள்ள போராட்டத்தில் காங் கிரஸ் முன்னணித் தலைவரும், மக்களவை எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல்காந்தி கலந்து கொள்கிறார்.

**முதல்வர் தலைமையில் நடைபெற்ற எம்.பி.க்கள் கூட்டத்தில் தீர்மானம்!**

யு.ஜி.சி., திருத்த விதிகளை கண்டித்து மாணவர் அணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் பிப். 6 அன்று நடைபெறும் என்று கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கழக எம்.பி.க்கள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஆர்ப்பாட்டம் நடைபெறுவதற்கான ஏற்பாடுகளை கழக மாணவரணியினர் தீவிரமாக செய்து வந்தனர்.

இந்நிலையில் யு.ஜி.சி., திருத்த விதிகளை கண்டித்து டெல்லி ஜந்தர் மந்தரில் இன்று காலை 10 மணிக்கு தி.மு.க. மாணவரணி சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

**டி.ஆர்.பாலு எம்.பி. தலைமையில் ஆலோசனை!**

இந்நிலையில், ஆர்ப்பாட்டத்திற்கான ஏற் பாடுகள் குறித்து டெல்லியில் தி.மு.க. பொரு ளாளரும், மக்களவை தி.மு.க. குழுத் தலை வருமான டி.ஆர்.பாலு தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இதில், தி.மு.க. மாணவரணிச் செயலாளர் எழிலரசன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் வில்சன், எம்.எம்.அப்துல்லா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய, சி.வி.எம்.பி.எழிலரசன், டெல்லியில் தி.மு.க. நடத்தும் போராட்டத்தில் காங்கிரஸ் முன்ன ணித் தலைவரும், மக்களவை எதிர்க்கட்சி தலைவருமான ராகுல்காந்தி, சமாஜ்வாதி கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவ் மற்றும் இந்தியா கூட்டணிக் கட்சிகளின் தலைவர் கள், திரிணாமுல் காங்கிரஸ் கட்சி சார்பில் சுதீப் பந்தோ பாத்யாயா, ராஷ்ட்ரிய ஜனதா தளம் கட்சி சார்பில் மனோஜ் குமார் ஜா, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பில் திருமா வளவன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் ஜான் பிரிட்டாஸ், புரட்சிகர சோஷிய லிஸ்ட்டின் பிரேம சந்திரன், கம்யூனிஸ்ட் கட்சிகள் சார்பில் சுப்பராயன், செல்வராஜ் உள்ளிட்ட இந்தியா கூட்டணிக் கட்சியினர் கலந்து கொள்கின்றனர் என்று தெரிவித்தார்.

---

# ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல்: விறுவிறுப்பான வாக்குப்பதிவு!

*ஈரோடு, பிப். 6 -*

*ஈரோடு கிழக்கு தொகுதி காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினராக இருந்த ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன், கடந்த டிசம்பர் மாதம் மறைவெய்தியதைத் தொடர்ந்து அத்தொகு திக்கு நேற்று இடைத்தேர் தல் நடைபெற்றது.*

*நேற்று மாலை 4 மணி நிலவரப்படி வாக்குப் பதிவு 65 சதவிகிதத்தைத் தாண் டியது.*

*தி.மு.க. வேட்பாளர் வி.சி.சந்திரகுமார் உட்பட 46 பேர் களத்தில் இருந்த னர். தேர்தலையொட்டி, கடந்த 15 நாட்களுக்கு மேலாக நடைபெற்று வந்த அனல் பறக்கும் பிரச்சாரம் நிறைவடைந்தது.*

*இந்த நிலையில் நேற்று காலை 7 மணிக்கு வாக்குப் பதிவு துவங்கி மாலை 6 மணி வரை நடைபெற்றது.*

*இந்த வாக்குப் பதிவில் கழகம் சார்பில் போட்டி யிடும் வி.சி.சந்திரகுமார் குடும்பத்துடன் வந்து வாக்களித்தார்.*

*இதேபோன்று கழக நிர்வாகிகள், பொதுமக்கள் வரிசையில் நின்று வாக் களித்தனர்.*

*வாக்களிக்க வசதியாக, 53 இடங்களில் 237 வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட் டிருந்தன. மொத்தம் 850 வாக்குப்பதிவு இயந்திரங் கள் பயன்படுத்தப்பட்டன.*

**பலத்த பாதுகாப்பு!**

*ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில் இருந்து துப் பாக்கி ஏந்திய மத்திய தொழில் பாதுகாப்பு படை வீரர்களின் பாதுகாப்புடன் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், வாக்குச்சா சாவடி மையங்களுக்கு எடுத்துச்செல்லப்பட்டன. வாக்குச்சாவடிகளில் பயன் படுத்தக்கூடிய 85 வகை யான பொருட்களும் எடுத் துச்செல்லப்பட்டன.*

*இடைத்தேர்தல் பணி யில் 1,195 அலுவலர்கள் மற்றும் 2 ஆயிரத்து 675 காவலர்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டனர்.*

*மேலும் வாக்காளர்கள் வெயிலில் நிற்பதை தவிர்ப் பதற்காக நிழல் பந்த ல்கள் அமைக்கப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.*

**வாக்கு எண்ணிக்கை!**

*நேற்று பதிவான வாக்கு கள் வரும் 8ஆம் தேதி - சனிக்கிழமை எண்ணப் படுகின்றன.*